**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 105/2006**

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 02.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சக்திவேல் Father's Name : ஆறுமுகம்

துவக்க நேரம்: 05.06 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :

1. சர்வே எண்.60/8 என்பது அ பதிவேட்டில் அரசு புறம்போக்கு வாய்க்கால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அ பதிவேடு **பி.வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ச.எண்.60-ல் உள்ள உட்பிரிவுகள் அனைத்தும வருவாய் ஆவணங்களில் நஞ்சை என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக நஞ்சை நிலங்களுக்கு ஏரி, ஆற்றுபாசனங்கள் இருக்கும் என்றால் சரிதான்.

2. எனது தகப்பானார் ச.எண்.60/6A, 6B, 60/7A, 7B மற்றும் 67/3-ல் உள்ள கிணறு ஆகிய சொத்துக்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பு அப்பாவு உடையாருக்கும், பிரதிவாதியின் தகப்பனார் தேவராஜ்க்கும் கூட்டு உரிமையாக இருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்ற பின்பு எனது தகப்பனாருக்கும், பிரதிவாதிக்கும் கூட்டு உரிமையாக இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு கூட்டு உரிமை உள்ள சொத்தில் அமைந்திருக்கும் நீர்பாசனத்தை தடை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கூட்டு உரிமையாளருக்கு எதிராக தடையுத்தரவு கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

3. எனக்கு பாத்தியப்பட்ட ச.எண்.60/6A, 60/7A -ல் உள்ள நிலங்களுக்கு வாய்க்கால் பாசனம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்களில் உள்ள நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் உள்ள நிலங்களுக்கு உள்ளது என்றாலும் நான் தற்பொழுது வழக்கிற்காக இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.60/6B, 60/7B-ல் உள்ள நிலங்களுக்கு சர்வே எண்.67/3-ல் உள்ள பொது கிணற்றிலிருந்தும், ச.எண்.60/3-ல் உள்ள பொது கிணற்றிலிருந்தும் நீர்ப்பாசனம் கொண்டு செல்லவும் ஏரியிலிருந்து நீர்ப்பாசனம் கொண்டு செல்லவும் வாய்க்கால் உரிமை உள்ளது என்றால் அதுபோன்ற எந்த வாய்க்காலும் அங்கு இல்லை.

4. பிரதிவாதிகளின் நிலத்தை சுற்றிலும் எனக்கு நிலம் உள்ளதால் அவர்களது நிலத்திற்குச் செல்லும் நீர்ப்பாசனத்தை தடுத்தால் பிரதிவாதிகளின் நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் பிரதிவாதிகளுக்கு சொந்தமான ச.எண்.60/6B, 60/7B -ல் உள்ள நிலத்தை வாதிகளுக்கு கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக ச.எண்.60/4A-ல் உள்ள நிலத்தை கொடுத்து பரிவர்த்தனை செய்துகொள்வதாகவும், ச.எண்.67/3 -ல் உள்ள பிரதிவாதிகளுக்கு சொந்தமான பாகத்தை எனது தகப்பனாருக்கு கொடுப்பதற்காக ரூ.2,50,000/- கொடுப்பதாக எனது தகப்பனரால் ஒப்பந்தம் பேசப்பட்டுரூ.1000/- முன்பணமாக கொடுக்கப்பட்டது என்றால் இல்லை, அதுபோல் எந்த ஒப்பந்தமும் இல்லை. மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் நானும், எனது தகப்பனாரும் கையெழுதிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை பிரதிவாதிகள் பதிலுரையில் கூறியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.105/2006, Dt.02.02.2026.

5. வாதியின் வழக்குரையில் தாவா சொத்து தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று பிரதிவாதிக்கு தாக்கல் செய்துள்ள பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரையில் திருத்தமானது காலம் கடந்து மேற்கொள்ளப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ச.எண்.60/6B, 60/7B -ல் உள்ள நிலங்களுக்கு ச.எண். 60/8-ன் வழியாகவும் எனக்கு பாத்தியமான ச.எண்.60/1B வழியாகவும் நீர்பாசனம் கொண்டு செல்ல வாய்க்கால் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தில் பிரதிவாதி வாய்க்கால் உரிமையை கோரியது தவிர வேறு எந்த இடையூறும் வாதிக்கு ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவாவிற்கு பின்னிட்டு எனக்கும், பிரதிவாதிக்கும் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றால் எனது அப்பாவிடம் அடிக்கடி பிரச்சினை செய்து வந்தார். என்னிடம் பிரச்சினை செய்யவில்லை. அவ்வாறு பிரதவாதி பிரச்சினை செய்வதற்கு புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

7. ச.எண்.60/3, 67/3-ல் உள்ள கிணறு கூட்டு பாக கிணறு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பத்தாவது பத்தியில் பிரதிவாதியின் விவசாய நிலங்களுக்கு வாதிக்கு சொந்தமான ச.எண். 60/1A, 60/4, 60/6B, 60/7B ஆகிய நிலங்கள் வழியாக தண்ணீர் கொண்டு செல்ல உரிமை இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.56/1-ல் உள்ள ஏரி வாய்க்கால்தான் அழித்து தார் ரோடு அமைக்கப்பட்டது என்றாலும் ச.எண்.60/8-ல் உள்ள ஏரி வாய்க்கால் அழிக்கப்படவில்லை என்றாலும் தற்பொழுதும் அந்த ஏரிவாய்க்கால் பயன்பாட்டில் உள்ளது என்றாலும் சரிதான். அந்த ஏரி வாய்க்கால் அப்படியே தான் உள்ளது. ஏரி வாய்க்கால் அழிக்கவோ, வெட்டவோ இல்லை. மேற்படி தாவாவில் கோரியுள்ள பரிகாரம்

கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் தாவாவை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 05.44 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.105/2006, Dt.02.02.2026.